# March 3, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சர்வதேச அளவில் கச்சாஎண்ணெய் விலை உயர்ந்தாலும் இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை அதிகரிக்க வாய்ப்பில்லை என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) ஈரான் மற்றும் இஸ்ரேல்-அமெரிக்கா இடையேயான மோதலால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை 9 சதவீதம் உயர்ந்து ஒரு பீப்பாய் 80 டாலர்களாக அதிகரித்துள்ள போதிலும் இந்தியாவில் விலை மாற்றமின்றி பெட்ரோல், டீசல் விற்பனை செய்யப்படும் என மத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ii) இதுகுறித்து அந்த வட்டாரங்கள் மேலும் கூறுகையில், சர்வதேச கச்சா எண்ணெய் விலை அபரிமித மாக உயரும்பட்சத்தில் மட்டுமே பெட்ரோல், டீசல் விலையேற்றத்தை மத்திய அரசு பரிசீலிக்க வாய்ப்புள்ளது என்றன.

(iv) நாட்டுக்குத் தேவையான 88 சதவீத கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்து வருகிறது. இந்தச் சூழலில் தங்கள் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருவதால் ஹோர்முஸ் நீரிணையை மூடுவதாக ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

2. ஈரானின் மிக முக்கிய அணுசக்தி மையமான நடான்ஸ் மீது அணுசக்தி மையமான இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியிருப்பதாக, சர்வதேச அணுசக்தி முகமைக்கான (ஐஏஇஏ) ஈரான் தூதர் ரெசா நஜாபி குற்றஞ்சாட்டியுள்ளார்.

(i) வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச அணுசக்தி முகமையின் அவசரக் கூட்டத்தில் பேசிய அவர், ஈரானின் அமைதி வழி அணுசக்தித் திட்டங்களை முடக்கும் நோக்கில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:

- எங்களின் பாதுகாக்கப்பட்ட அணுசக்தி மையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணமாக ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்க முயலுவதாக அவர்கள் கூறுவது முற்றிலும் பொய்.
- தலைநகர் டெஹ்ரானில் இருந்து இருந்து சுமார் 220 கி.மீ. தொலைவிலுள்ள நடான்ஸ் மையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல், சர்வதேச விதிகளுக்குப் புறம்பானது. இதை சர்வதேச அணுசக்தி முகமையின் உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒருமித்த குரலில் கண்டிக்க வேண்டும்' என்றார்.

(ii) ஐஏஇஏ மறுப்பு:

- ஈரானின் இந்தக் குற்றச்சாட்டை ஐஏஇஏ தலைவர் ரஃபேல் மரியானோ கிரோஸி மறுத்துள்ளார். இது குறித்த அவரது விளக்கத்தில், 'ஈரான் மீதான தாக்குதல்களில் இதுவரை எந்தவொரு அணுசக்தி மையமும் சேதமடைந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. பூஷெர் அணுமின் நிலையம் உள்ளிட்ட ஈரானின் முக்கிய மையங்கள் அனைத்தும் பாதுகாப்பாக உள்ளன

என்றார்.

- அணுசக்தி மையங்கள் தாக்கப் படவில்லை என்பதற்குச் சான்றாக, அதன் அண்டை நாடுகளில் கதிர்வீச்சு அளவு அதிகரிக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

3. சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வரும் 8 மற்றும் 9-ஆம் தேதிகளில் நாடு முழுவதும் 250 மாவட்டங்களில் நடத்தப்படும் விளையாட்டுப் 'அஸ்மிதா' போட்டிகளில் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்க இருப்பதாக மத்திய விளையாட்டுத் துறை இணையமைச்சர் ரக்ஷா கட்சே அறிவித்தார்.

4. நாட்டின் எல்லையில் வேலி அமைப்பது, எல்லைச் சாவடிகள் அமைப்பது போன்ற பணிகளுக்காக 105 ஏக்கர் நிலத்தை மத்திய அரசுக்கு ஒதுக்க மேற்கு வங்க மாநில அரசு முதல் கட்ட ஒப்புதலை அளித்துள்ளது.

(i) இந்த நிலம் எல்லைப் பாதுகாப்புப் படைக்கு (பிஎஸ்எஃப்) ஒதுக்கப்பட்டு, 17 கி.மீ. தொலைவு எல்லையில் சோதனைச் சாவடிகள் உள்ளிட்டவை அமைக்கப்படவுள்ளன.

(ii) இது தொடர்பாக மேற்கு வங்க மாநில அரசு அதிகாரிகள் திங்கள்கிழமை கூறியதாவது:

- மாநில அமைச்சகங்களுக்கு இடையிலான குழு கூட்டம் அண்மையில் கொல்கத்தாவில் உள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில், எல்லைப் பகுதியில் வேலி, எல்லைச் சாவடிகள் அமைக்க மத்திய அமைப்புகளுக்கு நிலம் ஒதுக்குவது தொடர்பான திட்டம் பரிசீலிக்கப்பட்டு, கொள்கை அளவில் முதல்கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது. மொத்தம் 105 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படவுள்ளது. அடுத்தகட்டமாக மாநில அமைச்சரவை இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.
- மொத்தம் 17 கி.மீ. தொலைவு எல்லையில் வேலி மற்றும் 9 எல்லைச்சாவடிகளை அமைக்க பிஎஸ்எஃப் திட்டமிட்டுள்ளது.
- வங்கதேசத்தில் இருந்து கடத்தல், ஊடுருவல் அதிகம் நடப்பதால் அங்கு பாதுகாப்பையும், கண்காணிப்பையும் அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மேற்கு வங்கம், வங்கதேசத்துடன் 2,000 கி.மீ. தொலைவுக்கு மேல் எல்லையைப் பகிர்கிறது. இதில் பெருமளவில் இடங்களில் ஏற்கெனவே வேலி அமைக்கப்பட்டுள்ளது. நேபாளம், பூடானுடனும் மேற்கு வங்கம் எல்லை யைக்கொண்டுள்ளது.

5. மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் வெளியீட்டுப் பிரிவால் தலைசிறந்த தமிழ் அறிஞர்கள், பாரம்பரியம், கட்டடக் கலை, இலக்கியம், கலாசாரம் மற்றும் நாகரிக சிந்தனைகள் குறித்த 13 படைப்புகள், வந்தே மாதரம் பாடலை எழுதிய பங்கிம் சந்திர சட்டர்ஜி குறித்த தமிழ், ஹிந்தி, ஆங்கில மொழி நூல்கள் என மொத்தம் 16 படைப்புகளை குடியரசு துணைத் தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணன் தனது மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார்.

(i) இராமேஸ்வரம் (வெ.வேதா சலம்),

(ii) இராமாநுசர் (இராம. குருநாதன்),

(iii) நடுகல் வழிபாடும் சமூகமும் (ர. பூங்குன்றன்),

(iv) அரிக்கமேடு, கா.ராஜன்,

(v) பக்தி இலக்கியம் (தெ. ஞான சுந்தரம்),

(vi) இயற்கை வேளாண்மை (முனைவர் ரா.ராமன்),

(vii) பழந்தமிழரின் இசைக் கருவி கள்: ஒரு பன்முகப் பார்வை (செ. சுப்புலட்சுமி),

(viii) வரலாற்று நோக்கில் தமிழக நாட்டார் தெய்வங்கள் (கோ.சசிகலா).

(ix) புதிய அறிவியல் தொழில் நுட்பங்கள் (ப.குப்புசாமி),

(x) மதுரை மீனாட்சி சுந்தரேசுவ ரர் கோயில் (முனைவர் வெ. வேதாசலம்),

(xi) தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் (வெ. வேதாசலம்),

(xii) மணிமேகலை (பெ. சுயம்பு).

(xiii) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (பெ.சுயம்பு),

(xiv) நவபாரதச் சிற்பிகள் (பங்கிம் சந்திர சட்டர்ஜி-மொழி பெயர்ப்பு எஸ்.கே. போஸ்).

6.இந்தியா-கனடா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (அதிகாரபூர்வமாக விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது) விரைந்து இறுதி செய்ய பிரதமர் மோடி, கனடா பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் முடிவு செய்துள்ளனர்.

(i) கனடா பிரதமர் மார்க் கார்னி நான்குநாள்கள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்தார். புது தில்லியில் பிரதமர் மோடியை சந்தித்து கார்னி பேச்சுவார்த்தை நடத்தினார்.

(ii) அப்போது இந்தியா-கனடா உத்திசார்ந்த கூட்டுறவு, வர்த்தகம் மற்றும் முதலீடு, எரி சக்தி, வேளாண்மை, கல்வி, ஆராய்ச்சி உள்ளிட்ட முக்கிய த் துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே நிலவும் ஒத்துழைப்பு குறித்து இருவரும் ஆய்வு செய்தனர். மேலும், விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்யவும் மோடி, கார்னி முடிவு செய்தனர். மேற்காசியாவில் நிலவும் படுபயங்கரமான சூழல் குறித்தும் இருவரும் விவாதித்தனர்.

(iii) இருவருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து முக்கியக் கனிமங்கள் துறையில் ஒத்துழைப்பு, புதுப்பிக்கத்தக்க எரி சக்தி பயன்பாடு, கலாசார ஒத்துழைப்பு உள்ளிட்ட ஒப்பந்தங்களை இருநாடுகளும் மேற்கொண்டன.

(iv) இதைத் தொடர்ந்து, இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பிரதமர் மோடி கூறியதாவது:

- தற்போது சிவில் அணுசக்தித் துறையில், நீண்டகால யுரேனியம் விநியோகத்துக்கு இந்தியா-கனடா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. சிறிய அணு உலைகள், உயர்தர அணு உலைகள் சார்ந்தும் இந்தியா-கனடா ஒன்றிணைந்து பணியாற்றும்.
- இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் 2030-ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் டாலரை (சுமார் ரூ.4.58 லட்சம் கோடி) எட்ட வேண்டும் என்பதே இந்தியா-கனடாவின் இலக்கு. இதையொட்டி, இரு நாடுகளுக்கும் இடையே விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்வதற்கு முடிவு செய்துள்ளோம். இது இரு நாடுகளிலும் புதிய முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.
- கனடா ஓய்வூதிய நிதியின் 100 பில்லியன் டாலர் (சுமார் ரூ.9.15 லட்சம் கோடி) இந்தியாவில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது இந்தியாவின் வளர்ச்சி மீது கனடா வைத்துள்ள ஆழ்ந்த நம்பிக்கையின் அடையாளமாகும்.
- எரிசக்தித் துறையில் கூட்டுறவை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்லும் வகையில் ஹைட்ரோகார்பன்கள், புதுப்பிக்கத்தக்களரி சக்தி, பசுமை ஹைட்ரஜன், எரிசக்தி சேமிப்பு மீது கவனம் செலுத்தப்பட உள்ளது.
- இந்தியா-கனடா பாதுகாப்புப் பேச்சு வார்த்தை அமைப்பை உருவாக்க முடிவு செய்துள்ளோம். இந்தியாவில் கனடா பல்கலைக்கழகங்களைத் திறக்கவும் தீர்மானித்துள்ளோம்.
- பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடு வதில் இந்தியா-கனடா இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து இரு தரப்பும் விவாதித்தன. பயங்கரவாதம், அதற்கு ஆள்சேர்ப்பது ஆகியவை மனிதகுலத்துக்கே கடுமையான சவால் என்பதில் இந்தியாவும், கனடாவும் உடன்பட்டுள்ளன. உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்

(v) 2.6 பில்லியன் டாலர் ஒப்பந்தம் - இந்தியாவுக்கு கனடா 2.2 கோடி பவுண்ட் யுரேனியம் விநியோகம்

- ரேனியம் விநியோகத்தில் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையொப்பமிட்டன. இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவுக்கு கனடா யுரேனியம் விநியோகம் செய்ய உள்ளது. 2.6 பில்லியன் டாலர் (சுமார் ரூ.23,833 கோடி) மதிப்பு கொண்ட இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவின் சிவில் அணுசக்தித் துறைக்கு கனடா உதவிபுரிய உள்ளது. அதன்படி 2027 முதல் 2035-ஆம் ஆண்டு வரை, அணுசக்தி உற்பத்திக்கு சுமார் 2.2 கோடி பவுண்ட் யுரேனியத்தை இந்தியாவுக்கு கனடா விநியோகம் செய்ய உள்ளது.

7.தமிழகத்தில் கடந்த ஜனவரி மாதம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மருந்துகளில் 29 சதவீதம் தரமற்றவை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அடுத்தபடியாக கர்நாடகம், ராஜஸ்தானில் அதிக எண்ணிக்கையில் தரம் குறைந்த மருந்துகள் இருந்தது கண்டறியப்பட்டது.

(i) கடந்த ஜனவரி மாதத்தில் நாடு முழுவதும் 215 மருந்துகள் தரமற்றவையாக இருந்தது கண்டறியப்பட்டது. அதில், தமிழகத்திலிருந்து மட்டும் 43 மருந்துகள் இடம்பெற்றிருந்தன.

(ii) தமிழக மருந்து கட்டுப்பாட்டுத் துறையானது அந்த மாதத்தில் 147 மருந்துகளை சோதனைக்குள்படுத்தியது. அவற்றில் 29 சதவீத மருந்துகள் உரிய தரத்தில் இல்லை. அவற்றில் 22 மருந்துகள் சென்னையிலுள்ள ஆய்வகத்திலும், 21 மருந்துகள் மதுரையிலுள்ள ஆய்வகத்திலும் பரிசோதிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

(iii) அதேபோன்று கர்நாடகத்தில் 21 சதவீதமும், ராஜஸ்தானில் 17 சதவீதமும் தரமற்ற மருந்துகள் இருந்தன. தொடர்ந்து தெலங்கானா, கேரளம், ஒடிஸா, ஜம்மு-காஷ்மீர், ஹிமாசலப் பிரதேத்திலும் தரக் குறைபாடுடைய மருந்துகள் இருப்பது தெரியவந்தது.

(iv) ஒரு குறிப்பிட்ட உற்பத்தி தொகுப்பு (பேட்ச்) மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைவது, அந்தத் தொகுப்புக்கு மட்டுமே பொருந்தும் என்றும், சந்தையில் உள்ள மற்ற மருந்துகள் குறித்து கவலைப்படத் தேவையில்லை என்றும் மருந்து கட்டுப்பாட்டு வாரியம் தெளிவுபடுத்தியுள்ளது.

8.மேய்ச்சல் நிலம் மேய்ப்பதற்கே

மேய்ச்சல் நிலங்கள் மற்றும் அவற்றைச் சார்ந்திருக்கும் மேய்ச்சல் சமூகங்களின் முக்கியத்துவம்.

(i) உலகளாவிய அங்கீகாரம்:

- ஐ.நா. பிரகடனம்: மார்ச் 15, 2022 அன்று, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 2026 ஆம் ஆண்டை "மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு"என்று அறிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்தத் தீர்மானம் ஆரம்பத்தில் மங்கோலியாவால் முன்மொழியப்பட்டது, மேலும் இந்தியா உட்பட 60 நாடுகள் மற்றும் 450 க்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புகளிடமிருந்து ஆதரவைப் பெற்றது.
- மேய்ச்சல் நிலங்கள் பூமியின் நிலப்பரப்பில் கிட்டத்தட்ட பாதியை உள்ளடக்கியது, இது அவற்றை கிரகத்தின் மிகப்பெரிய மற்றும் மிக முக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒன்றாக ஆக்குகிறது.

(ii) வாழ்வாதாரங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பில் தாக்கம்

- உலகளவில், மேய்ச்சல் நிலங்கள் சுமார் 50 கோடி (500 மில்லியன்) கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரத்தையும் உணவுப் பாதுகாப்பையும் ஆதரிக்கின்றன.
- இந்தியாவில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால்நடைப் பொருட்கள் 4.5% பங்களிக்கின்றன.
- இந்தியாவில் 53% பால் மற்றும் 74% இறைச்சி கால்நடை வளர்ப்பாளர்களால் நிர்வகிக்கப்படும் கால்நடைகளிலிருந்து பெறப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- பாரம்பரிய கால்நடை வளர்ப்பு கிராமப்புறங்களில் கிட்டத்தட்ட 70% மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது.

(iii) இந்திய மற்றும் தமிழ்நாடு சூழலில் கால்நடை வளர்ப்பு

- இன பன்முகத்தன்மை: இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட 202 கால்நடை இனங்களில், 75 இனங்கள் குறிப்பாக கால்நடை வளர்ப்பாளர் சமூகங்களால் பராமரிக்கப்படுகின்றன.
- இந்தியாவில் 46 வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த சுமார் 1.3 கோடி (13 மில்லியன்) மக்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.
- தமிழ்நாடு சமூகங்கள்: தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கால்நடை வளர்ப்பு குழுக்களில் தோடா, பர்கூர் லிங்காயத், யாதவர், குரும்ப கவுண்டர் மற்றும் வன்னியர் ஆகியோர் அடங்குவர்.
- கால்நடை வளர்ப்பாளர்கள் ஒரு பாரம்பரிய சுழற்சியைப் பின்பற்றுகிறார்கள், மழை மாதங்களில் (அக்டோபர் முதல் ஜனவரி வரை) வனப்பகுதிகளுக்குச் சென்று, அறுவடைக்குப் பிறகு "மடிப்பதற்காக" (வயலில் கால்நடைகளை வளர்ப்பது) விவசாய நிலங்களுக்குத் திரும்புகிறார்கள், இது மண்ணுக்கு இயற்கை உரத்தை வழங்குகிறது.

(iv) சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகள்

- கார்பன் பிரித்தெடுத்தல்: புல்வெளிகள் காடுகளை விட கார்பனை உறிஞ்சி நிலத்தடியில் பாதுகாப்பாக சேமிக்கும் திறன் கொண்டவை என்று ஆராய்ச்சி சுட்டிக்காட்டுகிறது.
- காலநிலை மாற்றத்தைக் குறைத்தல்: பூமியின் கார்பனில் மூன்றில் ஒரு பங்கு ரேஞ்ச்லேண்ட்களில் சேமிக்கப்படுகிறது, இது காலநிலை மாற்றத்தைத் தணிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
- பல்லுயிர் மற்றும் தீ தடுப்பு: மேய்ச்சல் பல்லுயிரியலை அதிகரிக்க உதவுகிறது, நீர்நிலைகளைப் பாதுகாக்கிறது மற்றும் காட்டுத் தீ பரவுவதற்கு இயற்கையான தடையாக செயல்படுகிறது.

(v) முக்கியமான சவால்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள்

- கடந்த 60 ஆண்டுகளில், பாரம்பரிய மேய்ச்சல் நிலங்கள் கட்டாய வெளியேற்றங்கள், சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் மற்றும் மேய்ச்சல் அல்லாத தொழில்துறை அல்லது மேம்பாட்டு பயன்பாடுகளுக்காக திசைதிருப்பல்களை எதிர்கொண்டுள்ளன.
- 2006 ஆம் ஆண்டின் வன உரிமைகள் சட்டம் பாரம்பரிய மேய்ச்சல் உரிமைகளை அங்கீகரித்தாலும், இந்த உரிமைகள் பெரும்பாலும் செயல்படுத்தப்படுவதில்லை.
- மரங்களை நடுவதன் மூலம் இயற்கை புல்வெளிகளை காடுகளாக மாற்றும் நடைமுறை இயற்கை சுற்றுச்சூழல் அமைப்பை சீர்குலைக்கும்.

(vi) சமீபத்திய கொள்கை உத்தரவுகள்

- மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் சமீபத்தில் இந்தியாவில் உள்ள அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் குறைந்தது 25 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தைப் பாதுகாத்து பராமரிக்க ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

- ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றவும், பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களை மீண்டும் உற்பத்தித் திறன் கொண்ட புல்வெளிகளாக மாற்றவும் அழைப்பு விடுக்கிறது.
- "மேய்ச்சல் நிலம் மேய்ச்சலுக்கானது; மேய்ச்சல் தொழில் உயிர் வாழ்வதற்கானது".

9. இந்தியாவில் கோதுமை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கொள்கைகள் :-

(i) ஏற்றுமதி கொள்கை மற்றும் அளவுகள்

- மத்திய அரசு 25 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியுள்ளது.
- கூடுதலாக, மாவு (அட்டா), ரவா மற்றும் மைதா உள்ளிட்ட 5 லட்சம் டன் கோதுமை சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- இதை எளிதாக்கும் வகையில், மாவு ஆலைகள், வர்த்தகர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தியாளர்கள் மீது முன்னர் விதிக்கப்பட்ட இருப்பு வரம்புகளை அரசாங்கம் நீக்கியுள்ளது.

(ii) சாகுபடி மற்றும் உற்பத்தி இலக்குகள் (2025–26)

- இந்த பருவத்தில் கோதுமை 3.34 கோடி ஹெக்டேரில் விதைக்கப்பட்டுள்ளது, இது கடந்த ஆண்டு 3.28 கோடி ஹெக்டேரில் இருந்து சற்று அதிகமாகும்.
- 2025–26 காலகட்டத்திற்கான அதிகாரப்பூர்வ உற்பத்தி இலக்கு 11.9 கோடி டன்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) குவிண்டாலுக்கு ₹2,585 (100 கிலோ) என அரசாங்கம் நிர்ணயித்துள்ளது.

(iii) தற்போதைய இருப்பு நிலைகள்

- ஜனவரி 1 ஆம் தேதி நிலவரப்படி, இந்திய உணவுக் கழகத்தின் (FCI) கிடங்குகளில் 2.75 கோடி டன் கோதுமை இருந்தது.
- ஏப்ரல் 1 ஆம் தேதிக்குள், உள் நலத் திட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்த பிறகு, தோராயமாக 2 கோடி டன் கோதுமை சேமிப்பில் இருக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

(iv) காலநிலை அபாயங்கள் மற்றும் சவால்கள்

- தற்போதைய இறுதி வளர்ச்சி கட்டத்தில் ஆரோக்கியமான கோதுமை வளர்ச்சி மற்றும் அதிக மகசூலுக்கு 21 முதல் 22 டிகிரி செல்சியஸ் வரை நிலையான பகல்நேர வெப்பநிலை தேவைப்படுகிறது.
- வடக்கு மற்றும் மத்திய இந்தியாவில் (குறிப்பாக கிழக்கு உத்தரப்பிரதேசம், பீகார் மற்றும் மத்தியப் பிரதேசம்) இயல்பை விட அதிக வெப்பநிலை பயிர் ஆரோக்கியத்தில் கவலையை ஏற்படுத்துகிறது.
- இந்த பகுதிகளில் போதுமான குளிர்கால மழைப்பொழிவு இல்லாததால் ஈரப்பதம் குறைந்துள்ளது, இது இறுதி அறுவடையை எதிர்மறையாக

பாதிக்கலாம்.

- "எல் நினோ" விளைவின் ஆரம்ப அறிகுறிகள் தோன்றி வருகின்றன, இது வறட்சி நிலைமைகளுக்கு வழிவகுக்கும் மற்றும் அடுத்தடுத்த 2026–27 காரீஃப் பயிர்களை பாதிக்கும்.

(v) உலகளாவிய சந்தை இயக்கவியல்

- இந்திய கோதுமையின் விலை தற்போது டன்னுக்கு தோராயமாக $300 ஆகும்.
- அர்ஜென்டினா போன்ற நாடுகள் டன்னுக்கு $250 முதல் $260 வரை கோதுமையை வழங்குகின்றன, இதனால் ரூபாயின் மதிப்பு குறைந்து வரும் போதிலும் இந்திய ஏற்றுமதிகள் சர்வதேச சந்தையில் போட்டியிடுவது கடினம்.

(vi)

- இறுதி அறுவடை முடிவுகள் உறுதி செய்யப்படுவதற்கு முன்பு ஏற்றுமதிகளை அனுமதிப்பதில் அரசாங்கம் மிக அவசரமாக இருந்திருக்கலாம்.
- வானிலை ஏற்ற இறக்கங்கள் மொத்த உற்பத்தியில் வீழ்ச்சிக்கு வழிவகுத்தால், உள்நாட்டு சந்தை விலைகள் உயரக்கூடும், மேலும் அரசாங்கம் அதன் சொந்த கொள்முதல் இலக்குகளை அடைய போராடக்கூடும்